தினமணி

**வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை பயிற்சி முகாம்**

First Published : 30 Mar 2010 03:42:09 AM IST

கொடைக்கானல், மார்ச் 29: வேளாண்மை தொழில்நுட்ப வேளாண் முகமை சார்பில், கொடைக்கானல் பகுதிகளான மன்னவனூர், பண்ணைக்காடு, பூம்பாறை, தாண்டிக்குடி
ஆகிய பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகளுக்கு பயிற்சி முகாம், செண்பகனூரில் உள்ள லாரன்ஸ் ஹாலில் நடைபெற்றது.
கொடைக்கானல் தோட்டக்கலைத் துறை உதவி இயக்குனர் கிஷோர்குமார் தலைமை வகித்தார்.
முகாமில் பேசிய தோட்டக்கலைத் துறை (மண்ணியல் துறை) விஞ்ஞானி ஜானகி,விவசாய நிலங்களில் பயிரிடும் போது வானிலை, மண்ணின் தன்மை, உரம், பூச்சி மேலாண்மை, நோய் மேலாண்மை, நூற்புழு மேலாண்மை, முக்கிய பயிர்களின் சாகுபடிக் குறிப்பு, தோட்டக்கலைத் துறையின் உயரிய தொழில்நுட்பம் ஆகியவை குறித்து விவசாயிகளுக்கு விளக்கினார்.

விஞ்ஞானிகள் செந்தமிழ்ச்செல்வி, சதீஷ் ஆகியோர், விவசாயப் பொருள்களின் தன்மைகள் பற்றியும் அவற்றை விளைவிப்பது குறித்தும் விளக்கிப் பேசினர். தோட்டக்கலைத் துறை அலுவலர் ஜெயபால் நன்றி கூறினார்.
இது குறித்து தோட்டக்கலைத் துறை உதவி இயக்குனர் கிஷோர்குமார் செய்தியாளரிடம் கூறியதாவது:
கொடைக்கானல் பகுதிகளிலுள்ள அனைத்து விவசாயிகளுக்கும் ஒவ்வொரு குழுக்களாக பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இந்தப் பயிற்சி முகாமில் விவசாயிகள் கலந்து கொண்டு தங்களுக்குத் தேவையான ஆலோசனைகளைப் பெறலாம். இந்த முகாமானது தொடர்ந்து 3 நாள்கள் நடைபெறுகிறது என்றார்.

**நாளை விவசாயிகள் குறைகேட்பு கூட்டம்**

First Published : 30 Mar 2010 02:31:19 AM IST

கோவை, மார்ச் 29: கோவை மாவட்ட விவசாயிகள் குறைகேட்புக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளர்ச்சி மன்ற அரங்கில் புதன்கிழமை (மார்ச் 31) நடைபெறுகிறது.
÷ஆட்சியர் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் விவசாயிகள் பங்கேற்று விவசாயம் தொடர்பாக பிரச்னைகளைக் கூறி மனுக்கள் அளிக்கலாம்.

**எதிர்காலம் விவசாயிகள் கையில்**

First Published : 30 Mar 2010 06:28:42 AM IST

ஆலங்குடி, மார்ச் 29: காலம் விவசாயிகளை எதிர்நோக்கியுள்ளதால், பல்வேறு நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி பயிர்ச் சாகுபடியை அதிகரிக்க வேண்டும் என்றார் மாவட்ட வேளாண் வணிகத் துறை இணை இயக்குநர் டி. தங்கவேலு.

ஆலங்குடி அருகேயுள்ள திருவரங்குளம் வேளாண் விற்பனை மையத்தில் வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமைத் திட்டம் மூலம் புதுகை கிரீன்கேர் பவுன்டேசன் சார்பில் திங்கள்கிழமை நடைபெற்ற வாழை விவசாயிகளுக்கான கருத்தரங்கைத் தொடக்கிவைத்து மேலும் அவர் பேசியது:

வாழையில் அதிகமான ரகங்களும், ருசியும் நம் நாட்டுக்கு ஈடாக வேறெங்கும் இல்லை. உலக அளவில் வாழை உற்பத்தியில் இந்தியா முதன்மை வகிக்கிறது. இருப்பினும், அதை சந்தைப்படுத்துவதில்தான் இந்தியாவின் நிலை பின்தங்கியுள்ளது.

அதற்குக் காரணம் அறுவடைக்குப் பிறகு செய்நேர்த்தி வழிமுறைகளை விவசாயிகள் பின்பற்றாததேயாகும். வாழையானது நம் நாட்டில் உள்ளூரிலேயே பங்கிட்டு விற்பனை செய்யப்படுவதால், அதீதமான அளவுக்கு ஏற்றுமதியாகவில்லை. ஏற்றுமதியை அதிகரிக்க அரசு வழங்கும் பயிற்சிகளை செயல்படுத்தி, புதிய உத்திகளை விவசாயிகள் கையாள வேண்டும்.

விவசாயிகள் வாழை சாகுபடியின் அளவு மற்றும் விலையைவிட அதன் தரத்துக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். வாழைப் பழத்தை நேரடியாக விற்பதைவிட மதிப்புக்கூட்டப்பட்ட பொருளாக மாற்றி விற்பதால் அதிக வருமானத்தைப் பெறுவதுடன், பலருக்கு வேலைவாய்ப்பையும் அளிக்கலாம்.

பழையான வழிமுறைகளுடன் அதே பயிர்களை தொடர்ந்து சாகுபடி மேற்கொள்வதைவிட சந்தையின் நிலவரம் தெரிந்து லாபம் தரக்கூடிய பயிர்களை சாகுபடி செய்ய வேண்டும் என்றார் தங்கவேலு.

பயிற்சிக்கு கிரீன்கேர் பவுன்டேசன் இயக்குநர் வி. ரவீந்திரன் முன்னிலை வகித்தார். பயிற்சியில் ஏராளமான முன்னோடி விவசாயிகள் பங்கேற்றனர்.

**மரபணு மாற்றச் சட்டம் விவசாயிகள் சங்கம் ஆர்ப்பாட்டம்**

First Published : 30 Mar 2010 12:00:00 AM IST

காஞ்சிபுரம், மார்ச் 29: மரபணு மாற்றம் செய்த விதைகள் பற்றி விமர்சித்தால் அபராதம் விதிக்கும் கடுமையான சட்டத்தை மத்திய அரசு கொண்டு வருவதைக் கண்டித்து தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தினர் திங்கள்கிழமை ஆர்ப்பாட்டத்தில் (படம்) ஈடுபட்டனர்.

÷இந்த ஆர்ப்பாட்டத்துக்கு மாவட்டத் தலைவர் கே.நேரு தலைமை தாங்கினார். இந்த ஆர்ப்பாட்டத்தில் விவசாயத்துக்கு பயன்படுத்தும் உரவிலையை உயர்த்தக் கூடாது, மனிதனுக்கு தீங்கு விளைக்கும் மரபணு மாற்றம் செய்த உணவு பொருள்கள் உற்பத்தியை தடை செய்ய வேண்டும். மரபணு மாற்றம் செய்த விதைகள் பற்றி விமர்சனம் செய்தாலோ, அதனால் மனிதர்களுக்கு ஏற்படும் கொடுமைகளை விளக்கினாலோ சிறை தண்டனை அபராதம் விதிக்கும் வகையில் கொண்டு வரும் சட்டத்தை கைவிட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

÷மேலும் படாளம் கூட்டுறவு சர்க்கரை ஆலையை திறக்க வேண்டும், விளை பொருள்களுக்கு கட்டுப்படியான விலை கொடுத்து அரசே கொள்முதல் செய்ய வேண்டும், விவசாயிகள் பயன்படுத்தும் விதை, உரம், பூச்சிக் கொல்லி மருந்துகளை மானிய விலையில் வழங்கிட வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளும் வலியுறுத்தப்பட்டன.
÷இந்த ஆர்ப்பாட்டத்தில் சிஐடியூ மாவட்டச் செயலர் முத்துகுமார், மாநிலப் பொருளர் ஏ.நாகப்பன், சி.பாஸ்கர், தமிழ்நாடு விவசாயிகள் சங்க வட்டச் செயலர்கள் இ.லாரன்ஸ், வி.கே.பெருமாள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

**செஞ்சி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ஒரே நாளில் குவிந்த 15 ஆயிரம் நெல் மூட்டைகள்: நெல் கொள்முதல் நிறுத்தம்**

First Published : 30 Mar 2010 12:00:00 AM IST

செஞ்சி,மார்ச் 29: செஞ்சி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ஒரே நாளில் 15 ஆயிரம் மூட்டைகள் வந்ததால் நிர்வாகமும், தொழிலாளர்களும் திணறினர். இதனால் நிர்வாகம் 30-தேதி மாலை வரை கொள்முதல் செய்வதை நிறுத்தி வைத்துள்ளது.

செஞ்சி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் இடப் பற்றாக்குறையால் அடிக்கடி பல் வேறு பிரச்னைகள் ஏற்படுகின்றன. குறிப்பாக போக்குவரத்து பாதிப்பு ஏற்படுகிறது. இதனால் சென்னை-திருவண்ணாமலை தேசிய நெடுஞ்சாலையில் 10 மணி நேரத்துக்கும் மேலாக போக்குவரத்து அடியோடு பாதிக்கப்படுகிறது.

தற்போது சம்பா அறுவடை நடைபெற்று வருவதால், விவசாயிகள் அதிக அளவில் நெல் மூட்டைகளை கமிட்டிக்கு எடுத்து வருகின்றனர். கமிட்டி வழி நெடுகிலும் மூட்டைகளை அடுக்கி வைத்து உள்ளே ஆள், லாரி செல்ல முடியாத அளவிற்கு நெல் மூட்டைகள் வருகின்றன.

ஆனால் கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகள் கமிட்டியில் இருந்து வெளியே வந்தால்தான், புதிய நெல் மூட்டைகளை உள்ளே அனுமதிக்க முடியும்.

ஒரு நாளைக்கு 10 ஆயிரத்துக்கும் மேல் நெல் மூட்டைககள் வருவதால், இதை கொள்முதல் செய்து வேறு மூட்டைகளில் மாற்று லாரிகளில் ஏற்றுவதற்கு மறுநாள் வரை ஆகிறது.

இதற்குள் புதிய நெல் மூட்டைகளை கொண்டுவரும் விவசாயிகள், சாலையில் காத்துகிடக்க வேண்டியுள்ளது. இதனால் உள்ளே செல்லமுடியாத சூழ்நிலையால் சாலைகளில் நூற்றுக்கணக்கான வண்டிகளை நிறுத்துவதால் போக்குவரத்துக்கு தடை ஏற்படுகிறது.

இந்நிலையில் இடப் பற்றாக்குறை காரணமாக உள்ளே உள்ள நெல் மூட்டைகளை சாக்கு பைகளில் மாற்றி லாரிகளில் வெளியே சென்ற பிறகுதான், புதிய நெல் மூட்டைகளை கொள்முதல் செய்ய வேண்டும் என்று தொழிலாளர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

இதனை தொடர்ந்து, 30-ம் தேதி செவ்வாய்க்கிழமை கமிட்டியில் உள்ள 15 ஆயிரம் நெல் மூட்டைகள் வெளியே சென்ற பிறகுதான், நெல் மூட்டைகள் கொள்முதல் செய்யப்படும் என்று கமிட்டி நிர்வாகம் அறிவித்துள்ளது. இதனால் 30-ம் தேதி இரவு முதல் நெல் மூட்டைகளை கொள்முதல் செய்யப்படும் என்று அறிவித்துள்ளது.

இதற்கு மாற்று ஏற்பாடாக ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் பக்கத்தில் உள்ள சுமார் 5 ஏக்கர் அரசு நிலத்தை கையகப்படுத்தி கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகளை அந்த இடத்தில் மாற்றி வைத்தால் இடப் பற்றாக்குறை நீங்கும். போக்குவரத்து தடை, தொழிலாளர்களுக்கு அளவுக்கு அதிகமான வேலை பளு, விவசாயிகள் 3 நாள் தவம் கிடந்து நெல்லை விற்கும் அவலம் ஆகியவற்றை தீர்க்க முடியும் என்கின்றனர் விவசாயிகள்.

**கோடை தொடங்கியும் குறையாத பூ விலை**

First Published : 30 Mar 2010 03:22:58 AM IST

கடையநல்லூர், மார்ச் 29: திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் வட்டாரப் பகுதிகளில் கோடை வெயில் தொடங்கி விட்ட நிலையிலும் பூக்களின் விலை குறையாததால், மாலைகளின் விலை மாற்றமின்றி தொடருகிறது.

கடையநல்லூர் வட்டாரத்தில் காசிதர்மம், சிங்கிலிபட்டி, சொக்கம்பட்டி, புன்னையாபுரம், அருணாசலபுரம், முத்துசாமியாபுரம், அச்சன்புதூர் உள்ளிட்ட பகுதிகளில் மலர் சாகுபடி செய்யப்படுகிறது.

பொதுவாக கோடை காலங்களில் மல்லிகை, பிச்சி, கேந்தி உள்ளிட்ட பூக்களின் வரத்து அதிகமாக இருக்கும். இதன் காரணமாக பூக்களின் விலையும் கணிசமாக குறையும்.

ஆனால் கோடைகாலம் தொடங்கிவிட்ட நிலையிலும் பூக்களின் விலையில் மாற்றமில்லை. மழை பெய்யாத காரணத்தால் பூக்களின் உற்பத்தி எதிர்பார்த்த அளவு உயரவில்லை எனவும் அதனால் பூ மார்க்கெட்டிற்கு பூக்களின் வரத்து குறைந்துள்ளது எனவும் பூ வியாபாரி ராஜன் தெரிவித்தார்.

மேலும், கடையநல்லூர் பூ மார்க்கெட்டில் (கிலோவுக்கு) மல்லிகை -ரூ.80, கேந்தி - ரூ.80, சேவல் பூ - ரூ.40, அரளி - ரூ.120, சம்மங்கி-ரூ.120, கனகாம்பரம் -ரூ.110 , ரெட் ரோஸ் -ரூ.120, சாதா ரோஸ் -ரூ.100 என்ற விலைக்கு ஏலம் விடப்பட்டன.

கடந்த மாதங்களில் விற்பனை செய்யப்பட்ட விலையிலேயே இந்த மாதமும் பூக்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன என்றார் அவர்.

**மண்புழு உர விற்பனையாளர்கள் கவனத்துக்கு...**

irst Published : 29 Mar 2010 06:02:40 AM IST

Last Updated : 29 Mar 2010 10:05:29 AM IST

தஞ்சாவூர், மார்ச் 28: தஞ்சாவூர் மாவட்டத்தில் மண்புழு உரம் விற்பனை செய்யும் நிலையங்கள் கண்டிப்பாக உரிமம் பெற அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் மாவட்ட வேளாண் துறை மூலம் உரிமம் பெற்ற உர விற்பனை நிலையங்களில், உயிர் உரங்கள் மற்றும் மண்புழு உரங்களும் விற்பனை செய்யப்படுகின்றன.

மண்புழு உரம் விற்பனை செய்யும் நிலையங்கள் கண்டிப்பாக உரிமம் பெற்றிருக்க வேண்டும். உரிமம் பெறாதவர்கள் உடனடியாக உரிமம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

தவறும்பட்சத்தில் உயிர் உரங்கள் பறிமுதல் செய்யப்படுவதுடன், சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரித்துள்ளார் மாவட்ட வேளாண் இணை இயக்குநர் பொ. லோகநாதன்.

தினமலர்

**விவசாயிகளுக்கு பயிற்சி**

திருமானூர்:திருமானூர் வட்டார வேளாண் துறை சார்பில் ஆத்மா திட்டத்தின் கீழ் பயறு வகை சாகுபடி குறித்து விவசாயிகளுக்கான பயிற்சி முகாம் குலமாணிக்கத்தில் நடந்தது.வேளாண் துணை இயக்குனர் சிவகுமார் வரவேற்றார். ஊராட்சி தலைவர் ஜெய்சங்கர், ஒன்றியக்குழு உறுப்பினர் வில்பர்ட் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

அரியலூர் மாவட்ட கலெக்டர்(பொ) பிச்சை தலைமை வகித்து பயிற்சி முகாமை துவக்கி வைத்து பேசுகையில், பயறு வகை உற்பத்தி குறித்த விழிப்புணர்வு மக்களிடையே பரவ வேண்டும். அதற்கு தேவையான நடவடிக்கைகளை வேளாண் துறை மேற்கொள்ள வேண்டும் என்றார்.வேளாண் துணை இயக்குனர் (மத்தியதிட்டம்) விஜயகுமார் பயறு வகைகளின் முக்கியத்துவம், தனி நபர் தேவை ஆகியவை குறித்து விளக்கி பேசினார். ரோவர் அறிவியல் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் மாரிமுத்து துவரை, உளுந்து, பாசிப்பயறு உள்ளிட்ட பயறு சாகுபடி முறைகள் குறித்தும், திருமானூர் வட்டாரத்திற்குட்பட்ட பயறு வகை ரகங்கள், உரமிடல் மற்றும் நீர்ப்பாசன முறைகள் குறித்து விளக்கி கூறினார்.

ரோவர் அறிவியல் மைய விஞ்ஞானி சங்கர் பயறு வகைகளை பாதிக்கும் பூச்சிகள் மற்றும் அதனை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து விளக்கி கூறி,பூச்சி மருந்துகளின் வீரியம், அதனை பயன்படுத்தும் முறைகள் ஆகியவை குறித்தும் விளக்கினார். தனலட்சுமி சீனிவாசன் கலைக்கல்லூரி திட்ட அலுவலர் முத்துகிருஷ்ணன் பயறுகளை தாக்கும் நோய்கள் குறித்தும், இயற்கை முறையில் அதனை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்தும் விளக்கி கூறினார். பெரம்பலூர் வேளாண் அலுவலர்(மத்திய அரசு) மோகன் தற்போது செயல்பட்டுவரும் திட்டங்கள் குறித்து விளக்கி கூறினார்.முகாம் ஏற்பாடுகளை துணை வேளாண் அலுவலர் காசிநாதன் செய்திருந்தார். உதவி வேளாண் அலுவலர்கள் சீத்தாராம், ராதா, முருகன், வேல்முருகன் மற்றும் 100 விவசாயிகள் கலந்து கொண்டனர். திருமானூர் வேளாண் உதவி இயக்குனர் லதா நன்றி கூறினார்.

**உர சட்டத்தை மீறினால் கடும் நடவடிக்கை: வேளாண் உதவி இயக்குனர் எச்சரிக்கை**

கடலூர் : உர சட்டத்தை மீறும் விற்பனையாளர்கள் மீது அத்தியாவசிய குடிமை பொருள் சட்டத்தின் கீழ் குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்படும் என வேளாண் இணை இயக்குனர் எச்சரித்துள்ளார். இது குறித்து கடலூர் வேளாண் உதவி இயக்குனர் (தரக்கட்டுப்பாடு) சுந்தரராஜன் விடுத்துள்ள செய்தி குறிப்பு: மத்திய அரசு 2010-11 நிதி ஆண்டிற்கு உரமானியம் உரத்தில் உள்ள சத்துக் களின் அடிப்படையில் வழங்க ஆணை பிறப்பித் துள்ளது. அதன்படி ஒரு கிலோ தழைச் சத்து 23.23 ரூபாய், மணி சத்து 26.28, சாம்பல் சத்து 24.49, கந்தக சத்து 1.78 ரூபாய் என நிர்ணயம் செய்துள்ளது. வரும் ஏப் 1ம் தேதி முதல் ஒரு டன் டி.ஏ.பி., உரம் 16,268 ரூபாய், மானோ அம்மோனியம் பாஸ்பேட் 16,219 ரூபாய், டிரிபில் சூப்பர் பாஸ்பேட் 12,087, முயூரேட் ஆப் பொட்டாஷ் 14,692 ரூபாய் மானியமாக வழங்கப்படுகிறது. அதே போல் காம்ப் ளக்ஸ், அம்மோனியம் சல்பேட் உரங்களுக்கும் மானியம் வழங்கப்படுகிறது. உர விலை நிலைபாடுகளில் கடந்தாண்டு கொள் முதல் செய்து இருப்பில் உள்ள உரங்கள் கணக்கெடுத்து, பழைய விலைக்கே விற்பனை செய்யவும், மானிய உரங்கள் தட்டுபாடின்றி, அரசு நிர்ணய விலைக்கு தேவையான காலங்களில் விவசாயிகளுக்கு வழங்கிட உர விற்பனையாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. உர சட்டத்தை மீறும் விற்பனையாளர்கள் மீது அத்தியாவசிய குடிமை பொருள் சட்டத்தின் கீழ் குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்படும்.

விவசாயிகள் உரம் பற்றி விவரங்களுக்கு கடலூர் வேளாண் இணை இயக்குனர் அலுவலக தொலை பேசி எண் 04142-290658 ஐ தொடர்பு கொள்ளவும்.

**இயற்கை விவசாயத்திற்கு மார்க்கெட்டில் வரவேற்பு : கலெக்டர் வள்ளலார் தகவல்**

திண்டுக்கல்: இயற்கை விவசாயத்தில் சாகுபடி செய்யப்படும் பொருட்களுக்கு மார்க்கெட்டில் நல்ல வரவேற்பு இருப்பதாக கலெக்டர் வள்ளலார் பேசினார்.
திண்டுக்கல்லில் ஊரக சுய வேலை வாய்ப்பு பயிற்சி நிலையத்தை தொடங்கி வைத்து கலெக்டர் வள்ளலார் பேசியதாவது: இந்த மையத்தில் 32 வகையான பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இயற்கை விவசாயம் சார்ந்த பயிற்சியும் வழங்கப் படுகிறது. இயற்கை விவசாயத்திற்கு மார்க்கெட்டில் நல்ல வரவேற்பு உள்ளது. பெரிய வணிக நிறுவனங்களில் இயற்கையாக விளைந்த காய்கறிகளுக்கு தனி விலை நிர்ணயிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது.

எதிர்காலத்தில் இயற்கை விவசாயத்தின் தேவை அதிகரிக்கும்.தையல் தொழிலாளர்களுக்கு அதிகளவு வேலை வாய்ப்பு கிடைக்கிறது. அதேபோல் பல மில்களில் தொழிலாளர் பற்றாக்குறை அதிகம் உள்ளது. படித்தவர்கள் தங்கள் படிப்பிற்கேற்ற வேலை வேண்டும் என பிடிவாதமாக இல்லாமல், கிடைத்த வேலையை திறம்பட செய்ய முன்வர வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.
சித்தன் எம்.பி., முன்னோடி வங்கி மேலாளர் ஜம்புநாதன், கனரா வங்கி உதவி பொதுமேலாளர் அண்ணாமலை, திண்டுக்கல் தலைமை மேலாளர் செல்வராஜ், நாகல்நகர் தலைமை மேலாளர் வைத்தியநாதன், பயிற்சி மைய இயக்குனர் கவுரிசங்கர் பங்கேற்றனர்.

**தானிய சேமிப்பு கலன் அமைக்க மானிய உதவி**

குஜிலியம்பாறை: குஜிலியம்பாறை பகுதி விவசாயிகள் தானிய சேமிப்பு கலன் அமைக்க மானியம் வழங்கப்படுவதாக வேளாண் உதவி இயக்குநர் ரவிபாரதி தெரிவித்துள்ளார்.

குஜிலியம்பாறை பகுதியில் நிலக்கடலை, சோளம், நெல் அறுவடை முடியும் தருவாயில் உள்ளது. அறுவடைசெய் யும் தானியங்களை உடனுக்குடன் விற்றால் நல்ல விலை கிடைக்காது என்பதால், நன்கு உலர்த்தி பக்குவப்படுத்தி, சந்தைகளில் தேவை அதிகரிக்கும் போது விவசாயிகள் விற் பனை செய்கின்றனர். தானியங்களை பாதுகாக்க தேவையான சேமிப்பு கலன்கள் அமைக்க விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது. ஒரு குவிண்டால் கலன் அமைக்க மானியமாக ஆயிரம் ரூபாயும், 2 குவிண் டால் கலன் அமைக்க 2 ஆயிரம் ரூபாயும் விவசாயிக்கு வழங்கப்பட உள் ளது.இந்த வாய்ப்பை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

**தெளிப்பு நீர் பாசனத்திற்கு விவசாயிகளுக்கு மானியம்**

வருஷநாடு: தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தில் பயிர் வகைகளுக்கு தெளிப்பு நீர்பாசனம் அமைக்க விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்பட்டு வருகிறது. க.மயிலை ஒன்றியத்திற்கு உட்பட்ட கடமலைக்குண்டு, பாலூத்து, முருக் கோடை, மேலப் பட்டி, உப்புத்துறை, வருஷநாடு உட்பட 400க்கும் மேற்பட்ட மலைக்கிராமங்கள் உள்ளன. இப்பகுதியில் அதிக அளவில் விவசாயிகள் மானவாரி விவசாயம் செய்கின்றனர். தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத் தில் துவரை, தட்டபயிர், உளுந்து போன்ற பயிர் வகைகளுக்கு தெளிப்பு நீர் பாசனத் திற்காக ஒரு ஹக்டருக்கு 7500 ரூபாய் மானியமாக விவசாயிகளுக்கு வழங்கப் பட்டு வருகிறது. தேவைப்படும் விவசாயிகள் கடமலைக்குண்டு வேளாண்மை அலுவலகத்தினை தொடர்பு கொண்டு பெற்று பயனடையுமாறு வேளாண்மை துறை உதவி இயக்குனர் திலகர் தெரிவித்துள்ளார்.

---

**வயல்காட்டு காலனியில் தரமானவிதை உற்பத்தி பயிற்சி முகாம்**

தென்காசி:செங்கோட்டை வயல்காட்டு காலனியில் தரமான விதை உற்பத்தி பயிற்சி முகாம் நடந்தது.செங்கோட்டை வட்டாரம் வயல்காட்டு காலனியில் விதை கிராம திட்டத்தின் கீழ் சிறு தானிய பயிரில் தரமான விதை உற்பத்தி பயிற்சி முகாம் நடந்தது. பஞ்., தலைவர் இந்திரா தலைமை வகித்தார். விதை சான்று அலுவலர் அசோகன் பேசும் போது, தரமான விதை உற்பத்தி செய்திடும் முறை பற்றியும், முளைப்பு திறன், ஈரப்பதம், கலவன் நீக்கும் முறை, விதை பண்ணை பதிவு குறித்தும் விளக்கினார்.

வேளாண்மை உதவி இயக்குநர் வெங்கடகிருஷ்ணன் பேசும் போது, விதை கிராம திட்டம் பற்றியும், விதைகள் மானிய விபரங்கள் பற்றியும், விவசாயிகள் தாங்களாகவே தரமான விதை உற்பத்தி செய்திட வேண்டும் என்பது குறித்தும் விளக்கினார். துணை வேளாண்மை அலுவலர் சுப்பிரமணியன் சிறு தானிய பயிர்கள் சாகுபடி முறை பற்றி பேசினார். விவசாயிகள் வயல் வெளிக்கு அழைத்து செல்லப்பட்டு கலவன்களை கண்டறிந்து நீக்கும் முறை பற்றியும், மகரந்த சேர்க்கை முறை பற்றியும் விளக்கம் அளிக்கப்பட்டது.மூன்றாம் கட்ட பயிற்சியில் விவசாயிகளை அனந்தபுரம் சுப்பையா விதை சுத்தி நிலையத்திற்கு அழைத்து செல்லப்பட்டு விதை சுத்தி நிலையம் செயல்படும் விதம், கலவன்கள் தனியாக பிரிக்கப்படும் முறை, கல், தூசி, அரிசி நீக்கப்படும் முறை பற்றி செயல் விளக்கம் செய்து காட்டப்பட்டது.ஏற்பாடுகளை வேளாண்மை உதவி இயக்குநர் வெங்கடகிருஷ்ணன், துணை வேளண்மை அலுவலர் சுப்பிரமணியன் செய்திருந்தனர்.

**அகலபார் முறையில் கரும்பு நடவு விவசாய கருத்தரங்கில் வலியுறுத்தல்**

கலவை: வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையும், கிரிப்கோ உர நிறுவனமும் இணைந்து திமிரி கோட்ட அலுவலகத்தில் விவசாய கருத்தரங்கை நடத்தின.ஆலையின் தனி அலுவலர் பூங்கொடி தலைமை தாங்கினார். கோட்ட கரும்பு அலுவலர் காசிராஜா வரவேற்றார். கிரிப்கோ உர நிறுவன கள அலுவலர் ஜெகநாதன் மண் பரிசோதனை செய்ய மண்மாதிரி எடுக்கும் முறை பற்றியும், மண் பரிசோதனை செய்து அதற்கேற்ப உரம் இடுவதால் ஏற்படக்கூடிய நன்மைகள் பற்றியும் எடுத்துக் கூறினார்.

மேலும் விவசாய அங்கத்தினர்கள் எழுப்பிய சந்தேகங்களுக்கு விளக்கம் அளித்தார். தலைமை கரும்பு அலுவலர் ராஜேந்திரன் பேசுகையில், கரும்பில் அதிக மகசூல் எடுப்பதற்கு , கரணை தேர்வு செய்வதிலிருந்து, கரும்பு அறுவடை செய்வது வரையிலும் கடைபிடிக்க வேண்டிய தொழில் நுட்பங்கள் குறித்து எடுத்துரைத்தார்.தனி அலுவலர் பூங்கொடி பேசுகையில், துல்லிய பண்ணை திட்டம் மற்றும் அரசின் மானிய திட்டத்தை பயன்படுத்தி 2009-10ம் ஆண்டு நடவு பருவத்தில் அதிக அளவு கரும்பு நடவு செய்யுமாறு அங்கத்தினர்களை கேட்டுக் கொண்டார்.

மேலும் ஆலைக்கு கரும்பு வெட்டும் இயந்திரம் வாங்க உள்ளதால் அதிகமாக அகலபார் முறையில் நடவு செய்ய விவசாய அங்கத் தினர்களை கேட்டுக் கொண்டார். மண் பரிசோதனை செய்து உரமிடுவதால் ஏற்படக்கூடிய நன்மைகள் பற்றி தெளிவாக எடுத்துரைத்தார். களப்பணியாளர் அந்தோணிராஜ் நன்றி கூறினார். இந்த கருத்தரங்கில் விவசாய அங்கத்தினர் 55 பேர் கலந்து கொண்டனர்.

**விலை குறைவாக இருப்பதாக விவசாயிகள் குவிந்ததால் பரபரப்பு**

செஞ்சி : செஞ்சி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நெல் விற்பனை மையத்தில் விலை குறைவாக இருப்பதாக கூறி விவசாயிகள் பணத்தை வாங்க மறுத்தனர். அதிகாரிகளின் சமரசத்திற்கு பிறகு ஒரு பகுதியினர் மட்டும் பணம் பெற்று சென்றனர். விழுப்புரம் மாவட்டம் செஞ்சி பகுதியில் நெல் அறுவடை சீசன் நேரத்தில்

வரத்து அதிகரிக்கும். இது போன்ற நாட்களில் செஞ்சி வேளாண்மை உற் பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நெல் விற்பனை மையத்தை துவங்கி நடத்துகின்றனர்.

நேற்று இந்த மையத் திற்கு 179 விவசாயிகள் 2,900 நெல் மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர். மாலை 3 மணிக்கு நெல் ஏலம் நடந் தது. இதில் மூட்டை ஒன்றுக்கு 100 ரூபாய் வரை விலை குறைத்து விட்டதாகக் கூறி விவசாயிகள் அங்கு திரண்டு பணத்தை வாங்க மறுத்தனர். அதிகாரிகள் கூறிய சமாதானத்தை ஏற்காமல் மாலை 6.30 மணிவரை பணத்தை வாங்க மறுத்தனர். விவசாயிகளிடம் தனி அலுவலர் ராமச்சந்திரன் பேசுகையில், ஏலத்தில் குறைவாக விலை போனதாக கருதப்படும் நெல் மூட்டைகளை மீண்டும் ஏலம் நடத்துவதாக அறிவித்தார். இதன் பிறகு விவசாயிகளின் ஒரு பகுதியினர் நேற் றைய விலைக்கு ஒப்புக் கொண்டு பணத்தை பெற்று சென்றனர். ஒரு பகுதி விவசாயிகள் இன்று (30ம் தேதி )மீண்டும் நெல் மூட்டைகளை ஏலத்தில் வைக்க ஒப்புக் கொண்டனர்.

**செயல்படாத சூரிய மின் வேலிகள் : விலங்குகளால் சேதமாகும் பயிர்கள்**

ஸ்ரீவில்லிபுத்தூர்: ஸ்ரீவி., வனப்பகுதியில் செயல்படாத மின் வேலிகளால், அதை தாண்டி வரும் விலங்குகள் விளைநிலங்களில் புகுந்து பயிர்களை சேதப்படுத்தி வருகின்றன. ஸ்ரீவி., சாம்பல் நிற அணில்கள் சரணாலய பகுதியில் ஏராளமான மான்கள், யானை, புலி, காட்டுப்பன்றிகள், காட்டெருமை உட்பட பல விலங்குகள் உள்ளன. வனப்பகுதியை ஒட்டியுள்ள தனியார் நிலங்களில், விலங்குகள் புகுந்து பயிர்களை சேதப்படுத்துவதால், விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. மேலும் மான், காட்டுபன்றிகள் தண்ணீருக்காக அடிக்கடி வனத்தை விட்டு வெளியேறி, தனியார் கிணறுகளில் விழுந்து பலியான சம்பவங்களும் தொடர்கிறது. இதை தடுப்பதற்காக வனத்துறை சார்பில், வன எல்லைகளில் சூரிய சக்தியில் இயங்கக்கூடிய மின்வேலி அமைக்கப்பட்டுள்ளது.

பிள்ளையார்நத்தம், செண்பகதோப்பு பகுதியில் அமைக்கப்பட்டுள்ள சூரிய மின் வேலிகள் செயல்படாமல் உள்ளன. இதனால் விலங்குகள், வேலியை எளிதாக தாண்டி விளை நிலங்களுக்குள் புகுந்துவிடுகின்றன. அவற்றால் ஏற்படும் பயிர் சேதத்தால் விவசாயிகள் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.
விவசாயி கந்தையா கூறியதாவது: தற்போது நிலவும் கடும் வறட்சியால் வனப்பகுதியில் தண்ணீர் இல்லை. காட்டிலிருந்து விலங்குகள், விளைநிலங்களில் புகுந்து மா, பலா, தென்னை, எலுமிச்சை, பயிரிடப்பட்ட நிலங்களில் புகுந்து சேதத்தை ஏற்படுத்தி வருகிறது. வனத்துறையினர், சூரிய மின்வேலியை சரி செய்து தருவதாக தெரிவித்து உள்ளனர். மின்வேலி செயல்பட நடவடிக்கை எடுத்தால் விலங்குகள் விளைநிலங்களுக்குள் வருவதை கட்டுப்படுத்த முடியும். தற்போது விலங்குகள் வராமல் தடுக்க வெடி போட்டு அவைகளை விரட்டியடித்து வருகிறோம், என்றார்.

ரேஞ்சர் பழனிராஜ் கூறியதாவது: செண்பகத்தோப்பு அத்தித்துண்டு, பிள்ளையார்நத்தம் ரெங்க தீர்த்தம் பகுதிகளில் இரு குழுவினர் செயல்படாமல் இருந்த சூரிய மின் வேலிகளை சரி செய்து வருகின்றனர்.
இரு நாட்களில் அவை செயல்படும், என்றார்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**எர்ணாகுளத்தில் கலப்பட பாலை தடுக்க நடமாடும் பால் பரிசோதனை மையம் மந்திரி திவாகரன் தொடங்கி வைத்தார்**

*பெரும்பாவூர், மார்ச்.30–*
*எர்ணாகுளத்தில் கலப்பட பாலை தடுக்க நடமாடும் பால் பரிசோதனை மையத்தை மந்திரி திவாகரன் தொடங்கி வைத்தார்.*

*நடமாடும் பால் பரிசோதனை மையம்*
*எர்ணாகுளம் மாவட்டத்தில் பொதுமக்களுக்கு வினியோகிக்கப்படும் பால் தரமானதா? என்பது குறித்து அடிக்கடி பால் பூத்துக்கள், கடைகளில் நுகர்வோர் துறை அதிகாரிகள் சோதனை நடத்தி வருகிறார்கள். விவசாயிகளிடம் இருந்து பால் வாங்கும் சில ஏஜெண்டுகள் அதில் ஏராளமான தண்ணீரை கலந்து விடுவதாக புகார் கூறப்பட்டது. இதையடுத்து ஏஜெண்டுகளிடம் இருந்து பெறப்படும் பால் சுத்தமானதா? என்பதை கண்டறிய கருவி கொண்டு அதிகாரிகள் ஆய்வு செய்தனர்.*

*இந்த நிலையில் ஏஜெண்டுகள் பால் விற்பனை செய்யும் இடத்திலேயே சென்று பால் தரமானதா? என்பதை அறிய நடமாடும் பால் பரிசோதனை மையம் அமைக்க வேண்டும் என்று பொதுமக்கள் பலர் கோரிக்கை விடுத்தனர். இப்போது பொதுமக்களின் கோரிக்கையை அரசு நிறைவேற்றி உள்ளது. எர்ணாகுளம், காக்கநாடு கலெக்டர் அலுவலகத்தில் நடமாடும் பால் பரிசோதனை மையம் தொடக்க விழா நடந்தது. ஒரு மினி வேனில் பால் பரிசோதனை செய்வதற்கு உரிய கருவிகள் பொருத்தப்பட்டு உள்ளன.இந்த நடமாடும் பால் பரிசோதனை மையத்தை உணவுத்துறை மந்திரி திவாகரன் தொடங்கி வைத்தார். பால் தரமானதா? என்பதை பரிசோதித்து பார்த்தார். பின்னர் அவர் விழாவில் பேசியதாவது:–*

*பென்சன் உயர்த்தப்படும்*
*பால் உற்பத்தியாளர்களுக்கு 300 ரூபாய் பென்சன் வழங்கப்பட்டு வருகிறது. இதை உயர்த்தி வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்து வருகிறார்கள். பால் உற்பத்தியாளர்களுக்கு இப்போது வழங்கும் பென்சன் தொகையை உயர்த்தி கொடுப்பது குறித்து மந்திரி சபை கூட்டத்தில் இறுதி முடிவு எடுக்கப்படும். அதன் பிறகு இது குறித்த அறிவிப்பு முறைப்படி அறிவிக்கப்படும்.*

*இந்த நடமாடும் பால் பரிசோதனை மையம் மூலம் விவசாயிகளிடம் இருந்து பால் வாங்கும் ஏஜெண்டுகள் தரமான பால் வினியோகம் செய்கிறார்களா? என்பதை அதிகாரிகள் கண்காணிப்பார்கள் இதனால் பொதுமக்கள் தரமான பாலை வாங்கி பயன்பெறலாம்.*
*இவ்வாறு அவர் கூறினார்.*

*இந்த நிகழ்ச்சியில் மாவட்ட பஞ்சாயத்து ஸ்டண்டிங் கமிட்டி தலைவர் அணில் ஹாஜிலி, பஞ்சாயத்து தலைவி பி.எஸ்.சைலா, ஜில்லா பஞ்சாயத்து தலைவர் பி.வி.ஜோசப், திருக்காக்கரா பஞ்சாயத்து தலைவி சபீதா கரீன், பால் உற்பத்தியாளர்கள் துணை இயக்குனர் ஜார்ஜ் குட்டி ஆகியோர் கலந்து கொண்டனர்.*

**வன உயிரின இழப்புகளை தடுக்க வனத்துறையும், மின்துறையும் இணைந்து கூட்டு ரோந்து செல்ல முடிவு**

குன்னூர், மார்ச்.30–
வனத்துறையும், மின் துறையும் இணைந்து கூட்டு ரோந்து செல்ல முடிவு செய்யப் பட்டுள்ளது.
திருட்டு
தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு சொந்தமான அரசின் மின் சாரத்தை திருட்டுத் தனமாக வேலி களிலும், வழித்தடங் களிலும் பாய்ச்சி இதனால் மனித உயிர்கள், வன உயிரினங்கள் மற்றும் பறவை இனங்கள் போன்றவைகள் உயிரிழக்கும் சம்பவங்கள் அவ்வப்போது நடைபெறு கின்றன.
இந்த முறைகேடுகளில் மனித உயிர்கள் பலியாகலாம் என முன் எச்சரிக்கை நடவ டிக்கையில் போலீஸ் துறை யினரால் குற்ற விசாரணை நடைமுறை சட்டம் மற்றும் இந்திய தண்டனை சட்டம் போன்ற வற்றில் நடவடிக்கை தொடரப்பட்டு வருகிறது.
வன உயிரினங்கள் பாதிக்கப் படலாம் என்பதால் வனத் துறையினர் தமிழ்நாடு வன சட்டம் மற்றும் வன உயிரின பாதுகாப்பு சட்டம் போன்றவற்றில் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

விழிப்புணர்வு முகாம்
சில சமயங்களில் நேரம், காலம், நிகழ்வு மற்றும் இறப்பிற்கான காரணம் போன்றவைகள் துறைக்கு துறை ஆவணங்களில் மாறு பட்டு, அதுவே குற்றம் செய்த வர்கள் சட்ட நடவடிக்கையில் இருந்து தப்பித்து செல்ல வழிவகை உள்ளது. இந்த முதன் பாட்டை களைய வேண்டும் என்ற உரிய நோக்கில் தமிழக மின்சார வாரியமும், வனத்துறையும் இணைந்து செயல்படலாம் என்று மேல் மட்ட அலுவலர்கள் அறிவுரை வழங்கி உள்ளார்கள்.
இந்த அறிவுரையின் படி கடந்த கால வன உயிரின இழப்புகளை கருத்தில் கொண்டு எதிர்காலத்தில் எவ்வாறு செயல்படலாம் என ஒரு சிறப்பு கலந்துரையாடல் கூட்டம் மற்றும் கூட்டு விழிப்புணர்வு முகாம் குன்னூரில் நடைபெற்றது.
கூட்டத்தில் தமிழக மின்சார வாரிய கண்காணிப்பு பொறியாளர் முத்துசாமி, செயல் பொறியாளர் நடராஜன், அனைத்து பொறி யாளர்கள், பணியாளர்கள் மற்றும் வனத்துறையின் முதுமலை புலிகள் காப்பக கள இயக்குனர் ராஜூவ் கே.ஸ்ரீ வஸ்தவா, நீலகிரி வடக்கு கோட்ட உதவி வன பாதுகாவலர் ஜெயராஜ், வனச்சரகர்கள் பால்ராஜ், ஜனார்த்தனன், வித்யாதரன் மற்றும் அனைத்து வனவர்கள் ஒருங்கிணைந்து கலந்து கொண்டனர். இந்த கூட்டத்தில் பல வகையான ஆலோசனைகள் பரிசீலிக்கப் பட்டது.

கூட்டு ரோந்து
முடிவில், இது போன்ற கூட்டங்கள் இனி வரும் காலங்களில் 3 மாதங்களுக்கு ஒரு முறை காலமுறை கூட்டமாக நடத்தலாம் என்று தீர்மானிக்கப்பட்டது.
மேலும் வன உயிரின இழப்புகள் ஏற்படும் போது இரு துறையினரும் கலந்து குற்றவாளிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டது. மேலும் இரு துறையும் இணைந்து அவ்வப்போது கூட்டு ரோந்துகள் செய்து குற்ற நிகழ்வுகளை ஏற்படும் முன்னரே கண்டறிந்து கடுமையான நடவடிக்கை எடுக்கலாம் எனவும் தீர்மானிக்கப்பட்டது.